**செ.வெ.எண்: 03 /செப்டம்பர்/ 2021** **நாள்: 01.09.2021**

**செய்திக் குறிப்பு**

---------

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் கோவிட்-19 நோய் தொற்று பரவல் காலத்தில் மூன்றாம் பாலினத்தவர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவிடும் வகையில் வாரியத்தின் மூலம் அடையாள அட்டை பெற்று குடும்ப அட்டை பெறாத மூன்றாம் பாலினத்தவர்களுக்கு நிதியுதவி தொகை அறிவிக்கப்பட்டு மாவட்ட சமூகநல அலுவலகம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே வாரியத்தின் மூலம் அடையாள அட்டை பெற்று குடும்ப அட்டை பெறாத மூன்றாம் பாலினத்தவர்களில் இதுநாள் வரை நிதியுதவி தொகை பெறாதவர்கள் 10.09.2021-க்குள் மாவட்ட சமூகநல அலுவலகத்தை அணுகி உதவி தொகையினை பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் மூலம் மூன்றாம் பாலினர்களுக்கான தேசிய அளவிலான இணையதள முகவரி http://transgender.dosje.gov.in/admin உருவாக்கப்பட்டுள்ளது மற்றும் மூன்றாம் பாலினர் கைப்பேசி செயலி வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த இணையதளம் மற்றும் செயலில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் வசித்து வரும் அனைத்து மூன்றாம் பாலினத்தவர்களும் தங்களது விபரங்களை உடனடியாக பதிவேற்றம் செய்து கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. பதிவேற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் உதவி தேவைபடின் மாவட்ட சமூகநல அலுவலகத்தை அணுகிட கேட்டுக்கொள்ளப்படுகிறது. இணையதள முகவரியில் தங்களது விபரங்களை பதிவேற்றம் செய்து கொண்டவர்களுக்கு மட்டுமே இனி வரும் காலங்களில் அரசு மூலம் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் வழங்க இயலும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**

**உதவி இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**திருச்சிராப்பள்ளி.**